# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 280 | சனி, மார்ச் 30, 2024 | 10 பக்கங்கள்




# உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொண்டவர்கள் யார்?

தமிழன் ஆசிரியர் சிவராஜா செவ்வி

## மைத்திரியின் அதிர்ச்சிக் குண்டுகள்! தேர்தல் நேரத்தில் வெளிவந்தது ஏன்?



# நேட்டோவின் கட்டளை அதிகாரிகளை குறிவைக்கும் ரஸ்யா – பலர் பலி?

வேல்ஸ் இல் இருந்து அருஸ்

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலை இந்தியாவே மேற்கொண்டது – முன்னாள் அரச தலைவர்



இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னணியில் இந்தியாவும் அதன் உளவுத்துறையும் இருப்பதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளதாக உயர்மட்ட பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரமாகக் காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று இன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் தொடர்புடையவர்களை தமக்கு தெரியும் என மைத்ரிபால சிறிசேன கண்டியில் அண்மையில் தெரிவித்த கருத்து தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்ய குற்றப்புலனாய்வுத்திணைக்களம் விடுத்த அழைப்புக்கமைய அவர் நேற்றுமுன்தினம் சி.ஐ.டி சென்றார். அதன்போது சுமார் ஆறு மணி நேரம் அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

மைத்ரியின் இந்த வாக்குமூலப் பிரதியை அன்றைய தினமே சட்டமா அதிபர் பெற்றுக் கொண்டு பரிசீலனை செய்ய ஆரம்பித்துள்ளதாக அறிய முடிந்தது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னணியில் இந்திய உளவுத்துறை இருப்பதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்ரி, அதுதொடர்பான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் கூறியுள்ளதாக அறியமுடிந்தது. எவ்வாறாயினும், அந்த ஆதாரங்களை நீதிமன்றத்தில் நீதிபதியிடம் மாத்திரமே வழங்கமுடியுமென்று மைத்ரி தெரிவித்துள்ளதாகவும் நம்பகரமாக தெரியவந்தது.

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்நடந்தகாலகட்டத்தில்இலங்கை

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

## சுவாமி விபுலானந்தரின் 132ஆவது ஜனன தினம்



சுவாமி விபுலானந்தரின் 132 ஆவது ஜனன தின நிகழ்வானது திருகோணமலை தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (26) இடம் பெற்றது.

குறித்த நிகழ்வை சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டுச் சபை ஏற்பாடு செய்திருந்ததுடன் அதன் தலைவர் கோ.செல்வநாயகம் தலைமையில் இடம் பெற்றது.

இதில் சமூக கல்விச் சேவையாளர்களைபாராட்டி கௌரவிப்புக்களும் இடம் பெற்றதுடன் பாக்கு நீரினையை கடந்து சாதனை படைத்த மாணவன் ஹ.தன்வந்த் உம் கௌரவிக்கப்பட்டார்.

இதில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இமானுவேல், பத்திரகாளி அம்பாள் ஆலய பிரதம குரு சோ.இரவிச்சந்திர குருக்கள், தவத்திரு அடிகளார் தென்கயிலை ஆதீனம் உட்பட

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## ரணிலுக்கு எதிரான நிலைப்பாட்டில் பொதுஜன பெரமுன

இலங்கை பாராளுமன்றத்தின் ஊடாக அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கு இலங்கை ஜனாதிபதிக்கு மக்களாணை கிடையாது. கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராக செயற்படுபவர்கள் வெளியேறலாம் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்ட பின்னர், கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

‘பொருளாதார நெருக்கடிக்கு 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த நல்லாட்சி அரசாங்கமே பொறுப்புகூற வேண்டும்.சர்வதேச பிணைமுறிகளில் இருந்து 12 பில்லியன் டொலர் கடன்களை பெற்றது. இந்த நிதிக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியவில்லை.மறுபுறம் அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு விற்கப்படடது. அந்த நிதியும் மாயமானது.

நல்லாட்சி அரசாங்கம் தேசிய உற்பத்திகளை மேம்படுத்த எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. இறக்குமதி, பொருளாதாரத்தில் மாத்திரம் கவனம் செலுத்தியது.தேசிய பொருளாதாரத்துக்கு வலுசேர்க்கும் வகையில் புதிய அபிவிருத்தி திட்டங்கள் ஏதும் நிர்மாணிக்கப்படவில்லை. இவ்வாறான பின்னணியில் தான்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

## இஸ்ரேல் உணவை ஆயுதமாக பயன்படுத்துகின்றது – ஐ.நா

காசா பகுதியில் ஏற்பட்டுள்ள மனிதப் பேரவலம் என்பது மனிதர்களால் உருவாக்கப்பட்டதொன்று அது தற்போது பட்டினிச்சாவாக அங்கு மாற்றம் பெற்றுள்ளது என ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் உள்ள புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.



மனிதாபிமானப் பொருட்கள் காசாவுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்தவேண்டிய அழுத்தத்தை இது .இஸ்ரேலுக்கு ஏற்படுத்தியுள்ளது.

பாலஸ்தீன மக்களின் பட்டினியை இஸ்ரேல் ஆயுதமாக பயன்படுத்துகின்றது. இது உறுதிப்படுத்தப்பட்டால் அது ஒரு போர்க்குற்றமாகும் என ஐ.நாவின் மனித உரிமைகள் அமைப்பின் ஆணையாளர் வோல்கர் ரேர்க் தெரிவித்துள்ளார்.

ஜோர்டான், எகிப்த்து, துருக்கி போன்ற முஸ்லீம் நாடுகளும், அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஜேர்மனி போன்ற இஸ்ரேலுக்கு ஆயுதங்களை வழங்கும் நாடுகளும் விமானங்கள் மூலம் உணவுப் பொருட்களை காசாவில் போடுகின்றன. ஆனால் அவற்றில் பல

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## பிலிப்பைன்ஸ் விவகாரம் இந்தியா-சீனா மோதல்



தென்சீனக்கடல் தொடர்பாக சீனாவுக்கும் பிலிப்பைன்ஸிற்கும் இடையிலான மோதல்களில் இந்தியா பிலிப்பைன்ஸிற்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தது இரு நாடுகளுக்கும் இடையிலான மோதல்களை மேலும் மோசமடையச் செய்துள்ளது.

எல்லா நாடுகளுக்கும் இறமையுண்டு அதனை பாதுகாக்கும் உரிமைகளும் அவைகளுக்கு உண்டு. நாடுகள் தமது சட்டங்களை பாதுகாக்க அருகில் உள்ள

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## பிரித்தானியாவின் தேர்தலில் தலையீடு – சீனா மீது தடை



பிரித்தானியாவின் தேர்தல் திணைக்களத்தின் வாக்காளர்களின் தகவல்கள் மற்றும் மின்னஞ்சல்கள் மீது சைபர் தாக்குதலை சீனாவின் நிறுவனம் ஒன்று மேற்கொண்டதாக தெரிவித்து சீனாவின் இரு நபர்கள் மற்றும் வூஹானைத் தளமாகக் கொண்ட நிறுவனம் மீது கடந்த செவ்வாய்க்கிழமை(26) பிரித்தானியா அரசு தடைவித்துள்ளது.

எனினும் பிரித்தானியாவின் இந்த குற்றச்சாட்டு ஆதாரமற்றது என சீனா தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் குற்றச்சாட்டுக்களுக்கு தகுந்த ஆதாரங்கள் இல்லை மற்றும் அது சரியான துறைசார் நிபுணர்களால்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

## எதிர்க்கட்சிகள் விவகாரம் – மேற்குலக நாடுகளுடன் இந்தியா மோதல்

புதுடில்லியின் முதலமைச்சர் அரவிந்த் கேஜ்ரிவாலுக்கு எதிரான ஊழல் வழக்கில் வெளிப்படையான விசாரணைகளை தாம் ஊக்குவிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. அரவிந்த் கைது தொடர்பில் அமெரிக்காவின் கருத்துக்களுக்கு எதிராக இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதுவரை இந்திய வெளிவிவகார அமைச்சகம் அழைத்துள்ள நிலையில் அமெரிக்கா இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து தாம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சக ஊடக தொடர்பாடல் அதிகாரி மத்தியூ மில்லர் தெரிவித்திருக்கின்றார்.

புரிதலே நாடுகளின்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## இராணுவத்தின் நிர்வாகத்தின் கீழ் ஒட்டுசுட்டான் ஓட்டு தொழிற்சாலை

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை இலங்கை இராணுவ சமூக சேவையின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளது. அத்துடன், அந்தத் தொழிற்சாலையை புனரமைக்கும் பணிகளில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த புதன்கிழமை(27) முல்லைத்தீவு மாவட் டத்துக்கு சென்ற இராணுவத் தளபதி லெப். ஜெனரல் விக்கும் லியனகே பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றார். இதன் போது, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலைக்கும் சென்று அங்கு முன்னெடுக் கப்படும் புனரமைப்பு பணிகளையும் பார்வையிட்டார். இந்தத் தொழிற்சாலையை கடந்த பெப்ரவரி 15ஆம் திகதி முதல் புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கூழாமுறிப்பில் அமைந்துள்ள இந்த ஓட்டுத் தொழிற்சாலை உள்நாட்டு போர் காரணமாக கடந்த 1983ஆம் ஆண்டு முதல் செயலிழந்து காணப்பட்டது. எனினும், 2009ஆம் ஆண்டின் பின்னர் இந்தத் தொழிற்சாலையை மீண்டும் இயக்க மாறி மாறி வந்த

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## உலக நீர் தினத்தினை முன்னிட்டு கந்தளாயில் இடம்பெற்ற நிகழ்வுகள்

சர்வதேச நீர் தினமான மார்ச் 22 இனை முன்னிட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கந்தளாய் காரியாலயம் ஏற்பாடு செய்த மரநடுகை மற்றும் புதிய பிரதான குழாய் நீர் பொறுத்தும் நிகழ்வு வியாழக்கிழமை (28) இடம் பெற்றது.



குறித்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள பிரதம அதிதியாக கலந்து கொண்டு மரநடுகையை

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

## விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கலை இலக்கிய நிகழ்வு



திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகத்தின் ஏற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கலை, இலக்கிய நிகழ்வுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் நேற்று புதன்கிழமை (27) கோப் நிறுவனத்தால் நடத்தப்படும் விசேட தேவையுடைய பாடசாலையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வு திருகோணமலை நகரசபையின் செயலாளர் வெ. இராஜசேகர் தலைமையில் இடம் பெற்றது.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# இலக்கு

## ஈழத்தமிழர் இறைமை மறைக்கப்பட்ட புதியநாடு புதிய கல்வி ரணிலின் நரித்தந்திரத் திட்டம்

சிறிலங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா இலங்கைத் தீவில் சிங்களத் தேச இனத்துக்கு எல்லாவகையிலும் சமத்துவம் உள்ள தேச இனமாக ஈழத்தமிழர்களும் குடிமக்களாக முஸ்லீம் மக்களும் மலையகத் தமிழ் மக்களும் வாழ்கின்றார்கள் என்ற வரலாற்று உண்மையை மறுத்து சிங்கள பௌத்த மக்களுடைய நாடாகவும் அதில் வாழும் சமூகங்களாக மட்டும் ஈழத்தமிழர்களையும், முஸ்லீம்களையும், மலையக மக்களையும் கொண்ட ஒரு புதிய நாட்டைத் தனது சிந்தனை சொல் செயல் மூலம் உலகில் நிறுவ முயற்சித்துக் கொண்டிருக்கிறார். 2009 முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பின் மூலம் சிறிலங்கா ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கை ரணில் விக்கிரமசிங்கா தனது சிறிலங்கா ஜனாதிபதி என்ற பதவிநிலை அதிகாரத்தைக் கொண்டு சிறிலங்காவின் நிலப்பரப்பான தேசமாக வெளிப்படுத்தும் முயற்சியே பொருளாதார எழுச்சி பெற்ற புதிய நாடாக்குவோம் என்னும் ரணில் விக்கிரமசிங்காவின் அரசியல் நரித்தனம்.

ஈழத்தமிழர் இறைமை மறைக்கப்பட்ட ரணிலின் இந்த புதிய நாட்டுக்கான புதிய கல்வித் திட்டம் ஒன்றும் அவரது அரசால் திட்டமிட்ட முறையில் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைச் சிறிலங்காவின் முன்னாள் கல்வி அமைச்சர் அகிலவிலாஜ் காரியவாசம் அவர்களால் ஜனாதிபதி அலுவலகத்தில் மார்ச் 25 இல் ஒழுங்குசெய்யப்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உடனான தனது சந்திப்பின் பொழுது சிறிலங்கா ஜனாதிபதி உறுதிப்படுத்தினார். "நாட்டுக்குப் புதிய கல்வி முறையைச் செயற்படுத்த அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. இதற்காக ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகக் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் தேர்தலின் பின் புதிய பாராளுமன்றத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்" என அந்தச் சந்திப்பில் தெரிவித்துள்ளார். எந்தப் பாராளமன்றம் வந்தாலும் அந்தப் பாராளுமன்றம் ஈழத்தமிழர்களின் இறைமை மறைக்கப்பட்ட புதிய கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவார்கள் என்ற சிறிலங்கா ஜனாதிபதியின் தெளிவான கூற்று சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஈழத்தமிழர்களின் இறைமையை அழிக்கும் செயற்திட்டம் எல்லா சிறிலங்கா அரசுக்களாலும் அன்றும் இன்றும் நாளையும் எந்த மாற்றமும் இல்லாமல் தொடரும் என்ற சிங்கள அரசியல் எதார்த்தத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

01. பல்கலைக்கழகப பேராசிரியர்கள் உட்பட்ட ஏனைய புத்தி ஜீவிகளையும் இணைத்து அறிவை உருவாக்குதல்
02. அந்த அறிவைப் பகிர்ந்தளித்தல்
03. இதன்வழியாக நாட்டின் தேசிய தேவைகளை நிறைவேற்றுதல்

என்ற செயற்திட்டம் இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட பொழுது இலக்கு மின்னிதழ் மற்றும் உயிரோடைத் தமிழ் வானொலி என்பன உலகத்தமிழர்களாக உலகின் முக்கியமான நாடுகளில் எல்லாம் வாழ்ந்து கொண்டிருக் கும் ஈழத்தமிழர்களுக்கு ஈழத்தமிழர்களின் துறைசார் புத்திஜீவிகளையும் மற்றைய தாயகத்தில் உள்ள புத்திஜீவிகளையும் கொண்ட குடைநிழல் அமைப்பினைத் தோற்றவித்து ஈழத்தமிழர்களுக்கான அறிவை உருவாக்குங்கள். பகிர்ந்தளியுங்கள். ஈழத்தமிழர்களின் தாயக தேசிய தன்னாட்சிக்கான தேவைகளுக்கான தீர்வுகளை முன்னெடுக்கும் வேகத்தை அதிகரித்துக் தீர்வுக்கான காலத்தைக் குறையுங்கள் என எத்தனை முறைகள் வேண்டுகோள்களை விடுத்தன என்பதனையும் எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது. ஒரு நாட்டின் தேச உருவாக்கத்தில் அறிவினைக் காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ற முறையில் உற்பத்தி செய்தல் என்பதும் அதனைப் பகிர்ந்தளிக்கிற செயற்திட்டங்களும் தான் அந்தத் தேசத்தின் தேசியத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான மக்கள் சத்தியையும் மண்ணின் வளத்தையும் ஒருங்கிணைக்கும்.

இதற்கு ஆரம்ப மற்றும் இரண்டாந்தரக் கல்வி முறைமைகள் மண்ணினதும் மக்களினதும் வரலாற்றை மானிடவியலை தொல்லியலை சமுகவியலை மொழியை மொழியின் இலக்கிய இலக்கணங்களை பொருளியலை அரசியலை ஆன்மிகத்தை முதலாம் வகுப்பு முதல் 13ம் வகுப்பு வரை திட்டமிட்ட முறையில் நன்கு ஒழுங்கு அமைக்கப்பட்ட பாடத்திட்டங்கள் வழி படிப்பிக்கப்படல் வேண்டும். கூடவே மனிதநேயமே எந்த ஆட்சி முறைமையிலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை மறவாது ஒவ்வொரு மனிதனினதும் சமத்துவம் சகோதரத்துவம் சுதந்திரம் என்பவற்றை அறிவாக்கக் கூடிய முறையில் ஆசிரியத்துவம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதற்கு எதிர்மாறாகச் சிறிலங்காவில் ஆரம்ப இரண்டாந்தரக் கல்வி முறைமைகள் சிங்கள நாடு சிங்கள இனம் பௌத்தம் என்பனவே இலங்கைத் தீவில் அன்றும் இன்றும் என்றும் நிலைநிறுத்தப்பட வேண்டியன என்பதையே சிறிலங்காவின் கல்வித் திட்டமிடல் நடைமுறைப்படுத்தல் என்பன தனது தலைமை இலக்காகக் கொண்டுள்ளன. இதுவே திறமைக்கு ஏற்பப் பல்கலைக்கழக அனுமதி என்ற பல்கலைக்கழக அனுமதி முறைமையை 1965 இல் ஐக்கிய தேசியக்கட்சியின் கல்வி அமைச்சர் ஐ. எம். ஆர். ஏ ஈரியக்கொல தரப்படுத்தல் மூலம் பல்கலைக்கழக அனுமதியை அறிமுகம் செய்ய வைத்தது. தொடர்ந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி இடதுசாரிகள் கூட்டு அரசாங்கத்தின் கல்வி அமைச்சர் பதியூதீன் முகம்மது அவர்களால் தரப்படுத்தல் தமிழர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதியை மறுக்கும் மனித உரிமை மீறலைச் சிங்களவர்களின் உயர்கல்வி; நலன்பேணும் திட்டமாக 1970இல் மீள் உறுதி செய்ய வைத்தது. சிங்களம் மட்டும் சட்டத்தின் மூலமான சிங்களத்தில் தேர்ச்சி இல்லாதவர்க்கான தொழில் செய்யும் உரிமை மறுப்பும் திறமைக்கு ஏற்ற கல்வி மறுப்பும் ஈழத்தமிழர்களின் வாழ்வியல் மறுப்பாகவும் மனித உரிமைகள் வன்முறையாகவும் 1956, 1970கள் முதல் இன்று வரை தொடர்வதே ஈழத்தமிழர் தாம் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வரும் தங்கள் மண்ணின் இறைமை மீட்பின் மூலமே தங்களுக்கான பாதுகாப்பான அமைதி வாழ்வை பெற முடியும் என்ற நிலையில் தங்கள் வாழ்வையே போராட்டமாக முன்னெடுத்து வருகின்றார்கள்.

இந்நிலையில் மீளவும் பல்கலைக்கழகக் கட்டமைப்பை முழுமையாக மறுசீரமைத்து பொருளாதார வளர்ச்சிக்குப் பெருமளவில் பங்களிக்கும் நிறுவனமாக மாற்றுவது என்ற ரணிலின் திட்டம் ஈழத்தமிழர்களின் இளம் சந்ததியினருக்கு அவர்களின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகள் குறித்த அறிவினை உற்பத்தி செய்வதை திட்டமிட்ட வகையில் இல்லாதொழிக்கும் கல்வி முறைமையாகவுள்ளது.

அதே வேளை பல்கலைக்கழகக் கட்டமைப்பை பல்கலைக்கழக ஆணைக்குழுவில் இருந்து பிரித்து சுயாதீன கல்வி நிறுவனங்களாக மாற்றுதல். பல்கலைக்கழகக் கல்வியையும் வெளிநாட்டவர்க்கும் உள்நாட்டு முதலாளிகளுக்கும் விற்றுப் பிழைக்கும் ரணிலின் திட்டாக உள்ளது. இதனால் பணம்படைத்தவர்க்கும் வெளிநாட்டினருக்கும் பல்கலைக்கழகக் கல்வி நிலை விரைவுபெறும். சிறிலங்காவின் இனஅழிப்பால் வறுமையுற்றுள்ள ஈழத்தமிழ் இளையவர்களுக்கு இதுமிகப்பெரிய உளவியல் நிதியியல் தாக்கத்தை விளைக்கும். பல்கலைக்கழகங்களில் முன்பு போல அரசியல்வாதிகள் நேரடியாகப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று கலந்துரையாடல்களை நடாத்துதலை மீளவும் தொடங்குதல் என்ற சிந்தனை சிங்கள இனவெறி மொழிவெறி மதவெறி வளர்க்கும் பள்ளிகளாகப் பல்கலைக்கழகங்களை மாற்றும் பேரபாயத்தையும் விளைவிக்கும்.

இந்நிலையில் ஈழத்தமிழர்கள் தங்களின் தேசிய தேவைகளுக்கான கல்விமுறைமையை உருவாக்கவும் நடைமுறைப்படுத்தவும் புலம்பெயர் ஈழத்தமிழ் புத்திஜீவிகளும் நிதிவளமுடையவர்களும் இணைந்து சிந்திக்க வேண்டும் என்பது இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொண்டவர்கள் யார்?



**மைத்திரிபால சிறிசேன குற்றப் புலனாய்வுத் துறையினரின் விசாரணையின் போது தெரிவித்த தகவல்கள் உத்தியோகபூர்வமாக வெளிவரவில்லை. ஆனால், அதிலிருந்து கசிந்த சில தகவல்கள் வெளியாகியுள்ளன. அதன்படி அவர் முக்கியமாக என்ன கூறியிருக்கின்றார்?**

உத்தியோகப்பற்றற்ற முறையில் சில செய்திகள் வெளிவந்துள்ளன. தான் தெரி வித்த கருத்துக்களுக்கான ஆதாரங்களை குற்றப் புலனாய்வுப் பகுதியிடம் சமர்ப்பிக்க முடியாது என்றும், நீதிமன்றத்தில் ஒரு நீதிபதியிடம் மட்டும் அவற்றை சமர்ப்பிக்க முடியும் என்றும் அவர் கூறியிருக்கின்றார். அதேவேளையில், இந்தத் தாக்குதலில் இந்தியப் புலனாய்வுத் துறை நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கின்றது என்றும் மைத்திரிபால சிறிசேன இந்த விசாரணையின் போது தெரிவித்ததாகத்தான் தகவல் கிடைத் திருக்கின்றது.

அதேவேளையில், அந்தச் சந்தர்ப்பத்தில் கொழும்பிலுள்ளஇந்தியத்துாதரகத்தில்பணிபுரிந்த உளவுத்துறைஅதிகாரியின்பெயரையும்அவர்தனது வாக்குமூலத்தில் கூறியிருக்கின்றார். அதேபோல, இலங்கையில் உள்ள உளவுத்துறை அதிகாரிகளும் இதில் தொடர்புபட்டிருப்பதாக மைத்திரிதெ ரிவித்திருக்கின்றார். இதற்குரிய தொலைபேசி இலக்கங்கள், இது குறித்த தகவல் தந்தது யார் போன்ற விடயங்களை அவர் கூறியிருக்கின்றார். ஆனால், அதற்குரிய ஆதாரங்களை சமர்ப்பிக்க அவர் மறுத்திருக்கின்றார். இதற்கான ஆதாரங் களை நீதிபதியிடம் தனிப்பட்ட முறையில் சமர்ப் பிப்பதற்கு தான் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

**மைத்திரி ஜனாதிபதியாக இருந்த ஒரு காலத்தில்தான் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. இவ்வளவு காலமும் அமைதியாக இருந்த மைத்திரி இலங்கையும், இந்தியாவும் தேர்தல்களை எதிர்கொண்டிருக்கும் சமயத்தில் அதிரடியாக இந்தத் தகவல்களை வெளியிட்டமைக்கு காரணம் என்ன?**

இந்த வாக்குமூலத்தை வழங்குவதற்கு சில வாரங்களுக்கு முன்னர்மைத்திரி அமெரிக்காவுக்குச் சென்று வந்திருந்தார். ஒரு வாரத்துக்கு முன்னர் பொலநறுவையில் சீனத் துாதுவருடன் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டிருந்தார். இந்தத் தாக்குதலின் சூத்திரதாரி யார் என்பது தனக்குத் தெரியும் என அவர் அறிவித்த அதே தினத்தில் ஐ.தே.க.வின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரமவுடன் கண்டியில் அவர் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார். இந்தச் சந்திப்புக்களின் பின்னர்தான் கண்டியில் வைத்து ஊடகங்களுக்கு தன்னுடைய கருத்தை மைத்திரி வெளியிட்டிருந்தார்.


இந்த விடயங்களை பகிரங்கப்படுத்துவதற்கு முன்னதாக அதனுடன் தொடர்பு பட்டதாக நாங்கள் சந்தேகிக்கப்படக் கூடியதான பல விடயங்களை அவர் செய்திருக்கின்றார். அவர் வாக்குமூலத்தை வழங்கிய தினத்தில் கூட, இவரது கட்சியின் பிரதான அமைப்பாளராகக் கருதப்படும் - மைத்திரியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான முன்னர் வெளிவிவகார அமைச்சில் பணியாற்றிய சஜின் வாஸ் கொழும்பிலுள்ள அமெரிக்க துாதருடன் கொழும்பிலுள்ள விடுதி ஒன்றில் உணவருந்திக்கொண்டிருந்தார். இவை அனைத்தையும் வைத்துப் பார்க்கும் போது மைத்திரியின் இந்த அறிவிப்பின் பின்னணியில் ஏதோ ஒரு சக்தி இருக்கின்றது. விரைவில் தேர்தல் நடைபெறவிருக்கும் சூழ்நிலையில் இவ்வாறான ஒரு அறிவிப்பை அவர் வெளியிட்டிருப்பதன் மூலம், அரசியலில் இது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஆனால், இதன் பின்னணியில் இருக்கக்கூடிய சக்தி எது என்பதுதான் இப்போது அனைத்துத் தரப்பினராலும் பார்க்கப்படுகின்றது.

## மைத்திரியின் அதிர்ச்சிக் குண்டுகள்! தேர்தல் நேரத்தில் வெளிவந்தது ஏன்?



**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று ஐந்து வருடங்கள் நிறைவடையவுள்ள நிலையில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த தகவல்கள் இலங்கையில் மட்டுமன்றி, பிராந்திய ரீதியாகவும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தாக்குதலின் பின்னணியில் இந்திய புலனாய்வுத் துறை சம்பந்தப்பட்டுள்ளதாக சி.ஐ.டி.க்கு கொடுத்த வாக்குமூலத்தில் மைத்திரி கூறியிருக்கின்றார். இது தொடர்பில் தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர்.சிவராஜா அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கேதருகின்றோம் இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

### தமிழன் ஆசிரியர் சிவராஜா செவ்வி



தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# கிழக்கு மாகாணத்தினை தாரைவார்க்கும் செயற்பாடுகள்

மட்டு.நகரான்

கிழக்கு மாகாணத்தினை தாரைவார்க்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.அதிலும் தமிழர்கள் வாழும் பகுதிகளை தாரைவார்க் கும் செயற்பாடுகள் பல்வேறு வழிகளிலும் முன்னெடுக்கப்படுகின்றது. கிழக்கு மாகாணம் தமிழர்களின் பாரம்பரிய பூமி அல்ல என்று எதிர்காலத்தில் நிறுவுவதற்கான செயற்பாடுகள் மிகவும் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.



இலங்கையில் மிகவும் அழகான இயற்கையின் உறைவிடமான பகுதிகளில் கிழக்கு மாகாணமும் ஒன்றாக காணப்பட்டாலும் கிழக்கு மாகாணத்தில் இதுவரையில் உல்லாசப் பிரயாணத்துறையினை நோக்காக கொண்டு எந்த திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை.இயற்கையான பகுதிகளில் இலங்கை அரசாங்கம் பல்வேறு திட்டங்களை ஏனைய சிங்கள பகுதிகளில் முன்னெடுத்து வருகின்ற போதிலும் கிழக்கில் அவ்வாறான எந்த திட்டத்தினையும் அரசு முன்னெடுக்கவில்லை.

அதற்கான காரணம் குறித்த பகுதிகளை அபகரிக்கும் நோக்கம் மற்றும் தமிழர்களின் விகிதாசாரத்தினை மாற்றுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருவதே காரணமாக அமைகின்றது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் *1968ஆம்* ஆண்டுவரையில் தமிழர்களின் மாகாணமாகவேயிருந்தது.*1970ஆம்* ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு உட்பட தெற்கின் பல பகுதிகளில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு புனர்வாழ்வு என்ற அடிப்படையில் கிழக்கில் குடியேற்றப்பட்டதுடன் அவர்கள் மூலமாக தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.



இவ்வாறு குடியமர்த்தப்பட்ட சிங்கள காடையர்களே இன்று அம்பாறை, திருகோணமலை,மட்டக்களப்பு மாவட்டங்களின் எல்லைப் பகுதிகளிலும் நகரப்பகுதிகளிலும் வாழ்கின்றார்கள். இன்று அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் சிங்களவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தினை குறிவைத்து தொடர்ச்சியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளில் இதுவரையில் அத்துமீறல்கள் மூலம் காணி அபகரிப்புகளையும் அத்துமீறிய குடியேற்றங்களையும் முன்னெடுத்தவர்கள் இன்று நகருக்குள்ளேயே வரும் நிலைமை ஏற்பட்டு வருகின்றது.




மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடை பண்ணையாளர்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் அத்துமீறிய குடியேற்றக்காரர்களினால் பிடிக்கப்பட்டு அத்துமீறிய விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் கால்நடைபண்ணையாளர்களின்போராட்டமானது தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

இன்றுவரையில் மயிலத்தமடு,மாதவனை கால்நடை பண்ணையாளர்களின் பிரச்சினைக்கு இதுவரையில் தீர்வுகள் வழங்கப்படாத நிலையில் பண்ணையாளர்களின் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இதுவரையில் பயன்படுத்தாத நிலையில் உள்ள மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் 'ஏ' மற்றும் 'பி' வலயங்களில் உள்ள காணிகளை பயன்படுத்தப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.



இதனடிப்படையில் பார்க்கப்போனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வள மான காணிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் பறிமுதல்செய்யப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் இருப்பதுடன் மேய்ச்சல் தரையில் அத்துமீறிய விவசாயிகளுக்கு அங்கீகாரமும் வழங்கப்படுமானால் அது மட்டக்களப்பு மாவட்டத்தில் இனவிகிதாசரத்தினை மாற்றுவதற்கான பாரிய நடவடிக்கைகளாகவே கொள்ளமுடியும்.

ஏனென்றால் மகாவலி திட்டம் கொண்டு வரப்பட்டபோது கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இதனை அமுல்படுத்துவதற்கு அன்றைய அரசியல் வாதிகளும் தமிழீழ விடுதலைப்புலிகளும் பாரிய தடைகளை ஏற்படுத்தியிருந்தனர்.ஆனால் அந்த தடைகள் இன்று இல்லையென்ற காரணத்தினால் எதிர்காலத்தில் பாரிய அத்துமீறிய குடியேற்றங்கள் நிகழ்வதற்கான வாய்ப்புகள் அதிகமாகவுள்ளது.

ஆனால் இது குறித்து மக்களையோ தமிழ் தேசியம் சார்ந்து செயற்படுவோரையோ,சிவில் சமூக செயற் பாட்டாளர்களையோ தெளிவுபடுத்துவதற்கான எந்த செயற்பாடுகளும் இதுவரையில் முன்னெடுக்காதது கவலைக்குரியதாகவே இருந்து வருகின்றது.

இந்த நிலையில் மட்டக்களப்பு நகருடன் இணைந்துள்ள கிழக்கு மாகாணத்தின் அற்புதமிக்க தீவாக கருதப்படும் மாந்தீவினை புனர்வாழ்வு மையமாக மாற்றுவதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கையினை எடுத்துவருகின்றது.

மாந்தீவானது கிழக்கு மாகாணத்தில்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

# உரிமைகளும், வலுப்படுத்த வேண்டிய பொறிமுறைகளும்

துரைசாமி நடராஜா

பெருந்தோட்ட மக்களின் தொழில் உரிமைகள் மீறப்பட்டு வருவதாக தொடர்ச்சியாகவே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலை காரணமாக அம்மக்கள் அதிருப்தியுடன் தொழில்புரியும் நிலையில் இது பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறையின் பின்னடைவிற்கும் உந்து சக்தியாக அமைந்துள்ளது. எனவே தொழிலாளர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாத்து அம்மக்களினதும் தொழிற்றுறையினதும் எழுச்சிக்கு வலுசேர்க்க வேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.



'உரிமைகள் மனித வாழ்வின் நிபந்தனைகள். பொதுவாக அவையின்றி எம்மனிதனும் சிறப்பாக செயற்பட முடியாது. இந் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகவே இயங்கும் அரசு உரிமைகளைப் பேணுவதன் மூலம் மட்டுமே தனது இலக்கினை அடைந்து கொள்ள முடியும்' என்கிறார் அறிஞர் லஸ்கி. இதேவேளை 'உண்மையான உரிமைகள் சமூக பொதுநலத்தின் நிபந்தனைகள்' என்று கூறும் ஹோபஸ், 'பல்வேறுபட்ட உரிமைகள் சமூகத்தின் ஒன்றுபட்ட அபிவிருத்திக்காக நமது மதிப்பீடுகளுக்கு கடமைப்பட்டன' என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் உரிமைகளை வகைப்படுத்துவதில் சரியான, தெளிவான ஒரு வகைப்பாட்டினை மேற்கொள்வது கடினமான செயன்முறையாகவே உள்ளதாக புத்திஜீவிகள் குறிப்பிடுகின்றனர். எவ்வாறெனினும் சிவில் உரிமைகள், அரசியல் உரிமைகள், பொருளாதார உரிமைகள் என்றவாறு உரிமைகளை வகைப்படுத்தி நோக்குகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

வாழ்வதற்கான உரிமை, கல்விக்கான உரிமை, மத உரிமை, சிந்திப்பதற்கும் வெளிப்படுத்துவதற்குமான உரிமை, ஒன்றுகூடும் உரிமை, சொத்துரிமை, சுதந்திரம், சமத்துவம் என்பன சிவில் உரிமைகளின் பாற்படுகின்றன. வாக்களிக்கும் உரிமை, தேர்தல்களில் போட்டியிடும் உரிமை, பதவியேற்கும் உரிமை, மனுச்செய்யும் உரிமை என்பன அரசியல் உரிமைகளாக கருதப்படுகின்றன. தொழில் செய்யும் உரிமை, தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை என்பன பொருளாதார உரிமைகளாகும். இந்த வகையில் தொழில் உரிமை என்பது மனிதனின் வாழும் உரிமையில் இருந்து வெளிப்படும் ஒன்றாகும்.


ஒவ்வொருவரும் தொழில் புரிவதற்கான உரிமையை பெற்றிருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். வாழ்க்கையை கொண்டு நடாத்துவதற்கு வேதனம் அவசியமாகின்றது. அந்த வேதனத்தை தொழில் பெற்றுக் கொடுக்கின்றது. இந்நிலையில் தொழில் உரிமைக்கு அரசியலமைப்பு அங்கீகாரம் வேண்டும் என்ற கோரிக்கையை அறிஞர் லூயிஸ் பிளான்க் முதன்முதலில் முன்வைத்திருக்கின்றார்.

இவரின் கோரிக்கையின் பின்னர் அநேகமான நாடுகளில் தொழில் உத்தரவாதம் வேண்டி மக்கள் போராட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. 19ம் நூற்றாண்டில் இருந்து ஏறக்குறைய 100 ஆண்டுகளின் பின்னர் தொழில் உரிமையின் தேவை சிறப்பாக உணரப்பட்டுள்ளதாயினும் அநேகமான நாடுகளில் இது சட்ட ரீதியாக நடைமுறைபடுத்தப்படக்கூடிய நிலையை அடைந்திருக்கவில்லை. எனினும் தொழில் உத்தரவாத கோரிக்கையின் காரணமாகவே வளர்ச்சியடைந்த நாடுகளில் வேலையற்றோர் காப்புறுதி போன்றவை விரும்பப்படுவது முக்கியமானது என்று எஸ்.கீதபொன்கலன் தனது நூலொன்றில் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

மேலும் தொழில் உரிமை என்பது உண்மையில் குறிப்பிட்ட ஒரு தொழிலை மேற்கொள்வதற்கான உரிமையை குறித்து நிற்கவில்லை. மாறாக சமூகத் தேவைகளுக்கு அவசியமான உற்பத்தித் துறைகளில் வேதனம் உழைக்கக் கூடிய சந்தர்ப்பத்தையே சுட்டி நிற்கின்றது என்றும் வலியுறுத்துகின்றார். தொழில் உரிமை வாழ்வதற்குத் தேவையான நியாயமான வேதனம், நியாயமான வேலைநேரம் என்பவற்றை உள்ளடக்கியதாக உள்ளது.

### சட்டங்களின் தோற்றம்

தொழிலாளர்களின் உரிமைகளைப் பேணும் நோக்கிலும், அவர்களின் நலன்களுக்கு வலுசேர்க்கும் வகையிலும் சட்டங்கள் பலவும் ஏற்படுத்தப்பட்டன. எஜமானர்கள் தொழிலாளர்களை சுரண்டுவதை குறைப்பதற்கும், தொழிலாளர்களின் நலன்புரி தொடர்பான விடயங்களுக்கும் இச்சட்டங்கள் தோள் கொடுத்தன.



1865ம் ஆண்டு சேவை ஒப்பந்தச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. வைத்தியசாலைகளில் இறப்பவர்களின் விகிதம் ஏனைய சமூகங்களோடு ஒப்பீட்டு ரீதியாக பெருந்தோட்ட தொழிலாளர்களிடையே உயர்வாக இருந்ததால், சுகவீனமுற்றிருக்கும் காலப்பகுதியில் அவர்களுக்கு இருப்பிட வசதி, உணவு, வைத்திய வசதி போன்ற சில குறைந்தபட்ச வசதிகள் செய்து கொடுக்கப்படுவதனை இச்சட்டம் வலியுறுத்தியது.

1984 ம் ஆண்டு 14 ம் இலக்கச் சட்டம் தொழிலாளர்களின் சமூக நலனிற்கு தொழில் வழங்குநரே பொறுப்பு என்று விதித்தது. 1912 ம் ஆண்டு 9 ம் 10 ம் இலக்க மருத்துவ உதவிச் சட்டங்கள் முக்கியத்துவம் மிக்கனவாக விளங்குகின்றன. இச்சட்டம் முதன்முறையாக ஒரு வயதுக்குக் குறைந்த பிள்ளைகளின் முறையான பராமரிப்பு, போஷாக்கு என்பவற்றுக்கு தோட்ட முகாமையாளரே பொறுப்பு என்று விதித்தது. மேலும் தோட்டங்களில் காணப்படும் சுகாதார வசதிகளையும், தோட்ட மக்களுக்கான சமூக நலன் வசதிகளையும் அரசாங்க மாவட்ட வைத்திய அதிகாரிகள் மேற்பார்வை செய்வதற்கும் இச்சட்டம் அதிகாரமளித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

1941 ம் ஆண்டு பிரசவ நன்மைகள் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. 1958 இன் 15 ம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் தொழிலாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். தொழில் தருநர், தொழில் புரிவோர் ஆகிய இரு தரப்பினருக்கும் இடையே கூட்டுறவினால் தொழில் புரிவோருடைய எதிர்கால அபிவிருத்தியின் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ள நிதியமாக ஊழியர் சேமலாப நிதியம் விளங்குகின்றது.



ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவு முழுமையாக தொழில் தருநரின் பொறுப்பாக இருந்தபோதிலும் அது சரியாக செயற்படாவிட்டால் அதுபற்றி தொழில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல் ஊழியரின் பொறுப்பாகும். 1980 இன் 46 ம் இலக்க ஊழியர்

தொடர்ச்சி 08 ஆம் பக்கம்





# நேட்டோவின் கட்டளை அதிகாரிகளை குறிவைக்கும் ரஸ்யா – பலர் பலி?

வேல்ஸ் இல் இருந்து அருஸ்

நேட்டே படையினர் உக்ரைனுக்குள் செல்வார்கள் என பிரான்ஸ் தெரிவித்த கருத்து பல நேட்டோ நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ள அதே சமயம் ரஸ்யா நேட்டோ படையினரையும், அவர்களின் கட்டளை அதிகாரிகள் மற்றும் கட்டளை மையங்களையும் குறிவைத்து கடுமையான தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது.



கடந்த ஞாயிற்றுக்கிழமை(24) உக்ரைனின் மேற்கு பகுதியில் உள்ள லிவ் நகர் மீது ரஸ்யா 7 கின்சால் வகை ஹைப்பசொனிக் ஏவுகணைகளை ஏவுயிருந்தது. நேட்டோவின் நிலத்தடி பயிற்சித் தளங்கள், கனரக ஆயுதங்களஞ்சியங்களை நோக்கி முதலில் நான்கு ஏவுகணைகள் ஏவியிருந்தது.

இந்த தளங்களை பாதுகாப்பதற்கு நேட்டோ படையினர் பெருமளவான வான் எதிர்ப்பு ஏவுகணைகளை அந்த பகுதியில் நிறுத்தியிருந்தபோதும் அவை ரஸ்யாவின் ஏவுகணைகளை இடைமறித்து தாக்கவில்லை என கூறப்படுகின்றது. கின்சால் ஏவுகணைகள் மற்றும் எக்ஸ்101 ஏவுகணைகளின் பறப்புப் பாதைகள் மிகவும் சிக்கலானது என்பதால் வான் எதிர்ப்பு ஏவுகணைகளால் அவற்றை தாக்குவது கடினம்.

மேலும் மார்ச் 8 ஆம் நாள் அமெரிக்காவின் MIM-104 Patriot மற்றும் உக்ரைனின் எஸ்-300 ஆகிய வானெதிர்ப்பு ஏவுகணைகளை ரஸ்யா அழித்திருந்ததும் உக்ரைனின் வான்னெதிர்ப்பு வலிமையை குறைந்திருந்தது. இந்த நிலையில் யப்பானில் உள்ள இரண்டு பற்றியாட் வகை ஏவுகணைகளை உக்ரைனுக்கு மாற்றுவது தொடர்பில் யப்பானுக்கு அமெரிக்கா அழுத்தங்களை கொடுத்து வருகின்றது. ஆனால் அவற்றை மாற்றினால் யப்பான் பாரதுூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என ரஸ்யா தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை(22) ரஸ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் உள்ள இசைநிகழ்வு நடைபெற்ற மண்டபம் மீதான தாக்குதலில் 140 பேர் கொல்லப்பட்டும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தும் உள்ள நிலையில் ரஸ்யா உக்ரைன் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தியிருந்தது.

லிவ் நகரில் உள்ள நேட்டோவின் பயிற்சி தளங்கள் மற்றும் ஆயுத மையங்களை ரஸ்யாவின் எக்101 மற்றும் கின்சால் ஏவுகணைகள் தாக்கிய பின்னர் அது தொடர்பான சேதங்களை மதிப் பிடுவதற்கு நேட்டோ படை அதிகாரிகள் சென்ற சமயம் ரஸ்யாவின் 3 கின்சால் ஏவுகணைகள் அந்த பகுதிகளில் வீழ்ந்து வெடித்துள்ளன.

இந்த தாக்குதலில் நேட்டோ நாடுகளின் 25 இற்கு மேற்பட்ட உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. கொல்லப்பட்டவர்களில் பலர் பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப் படுகின்றது.



இந்த தாக்குதலை தொடர்ந்து பிரான்ஸின் அதிபர் இமானுவேல் மக்ரோன் இந்த வாரம் பிரேசிலுக்கு அவசரமாக பயணத்தை மேற்கொண்டுள்ளார். பிரேசில் அதிபர் லுலாவின் ஆதரவை உக்ரைனுக்கு திரட்டுவதே அவரின் நோக்கம் என புளூம்பேர்க் ஊடகம் தெரிவித்துள்ளது. ஆனால் தெற்கு மண்டல நாடுகளின் கூட்டணியில் வலுவான சக்தியாக பிரேசில் உள்ளது என்பது அவரின் முயற்சி வெற்றியளிக்குமா என்ற கேள்விகளை எழுப்பியுள்ளது.

உலகின் மிக முக்கிய பொருளாதார நாடுகளின் கூட்டணியான ஜி-20 கூட்டணியின் தலைமைத்துவத்தை பிரேசில் இந்த வருடம் கொண்டுள்ளதும் மக்ரோனின் பயணத்தை தூண்டியிருக்கலாம்.

அதேசமயம், டொனஸ்க் பகுதியில் உள்ள Chasiv Yar பிரதேசத்தில் அமைந்திருந்த நேட்டோ படையினரின் இரகசிய தளம் மீது கடந்த செவ்வாய்க்கிழமை(26) ரஸ்யா மேற்கொண்ட ஸ்கன்டர் ஏவுகணைத்தாக்குதலில் அமெரிக்க மற்றும் போலந்து நாடுகளைச் சேந்த பல படை உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டதாக உக்ரைனின் தகவல்பிரிவு தெரிவித்துள்ளது.



இந்த தாக்குதல் தொடர்பில் முதலில் நேட்டோ கூட்டமைப்பு எதனையும் தெரிவிக்காதபோதும் தற்போது தனது உயர் படை அதிகாரியான பிரிகேடியர் ஜெனரல் அடம் மார்க்சக் திடீரென்று இறந்துள்ளதாக போலந்து தெரிவித்துள்ளது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் நடவடிக்கைப்பிரிவின் பிரதம அதிகாரியான இவரின் திடீர் மரணம் போலந்திலும், பல ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள படைத்துறை ஆய்வாளர்களை சந்தேகத்தில் ஆழ்த்தியுள்ளது.



படை நடைவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

## உரிமைகளும் ... தொடர்ச்சி ...

நம்பிக்கை நிதியச் சட்டம் தொழிலாளர் வாழ்வில் மற்றுமொரு திருப்புமுனையாகும். ஊழியர் சேமலாப நிதியத்தின் நன்மைகளை பெற்றுக் கொள்வதில் உள்ள கஷ்டங்களை நீக்குவதற்காக ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம் 1980 இல் அறிமுகம் செய்யப்பட்டது. இவையனைத்தும் தொழிலாளர்களின் நலன்களுக்கு வலுச் சேர்ப்பதாக அமைந்தன.

பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் (ICESCR) உறுப்புரை 6 ஆனது ஒவ்வொரு உறுப்பு நாடும் அனைத்து ஆட்களுடைய தொழில் உரிமையை அங்கீகரிக்க வேண்டும் எனவும், தனக்கு விரும்பிய தொழிலை தேர்ந்தெடுப்பதற்கு உரித்துடையவர் எனவும் குறிப்பிடுகின்றது. மேலும் தொழில் உரிமையை ஒவ்வொரு நபரும் அனுபவிக்கக்கூடிய வகையில் அரசு தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி அறிவுறுத்தல்களை பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றது.

தொழில் உரிமை ஒருவர் விரும்பிய தொழிலை தேர்ந்தெடுத்தலை பிரதான விடயமாக ஏற்றுக் கொண்டுள்ளது. இலங்கை அரசியல் அமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் உறுப்புரை 14 இவ்வுரிமையை



அடிப்படை உரிமையாக அங்கீகரித்துள்ளது. தொழிற்பாதுகாப்பு, நியாயமான சம்பளம், பாதுகாப்பானதும், தூய்மையானதுமான தொழில் சுற்றாடல் என்பவற்றுடன் தொழில் உரிமை தொடர்புபடும் நிலையில், ஒருவர் தனது அந்தஸ்தில் இருந்து உரிய பதவி உயர்வைப் பெற உரித்துடையவர் என்றும் உறுப்புரை 6 வலியுறுத்துகின்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமை சார்ந்த விடயங்கள் தொடர்பான சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் உடன்படிக்கை 110 மற்றும் 111 என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இலங்கை 1998 ஆம் ஆண்டு சர்வதேச தொழில் ஸ்தாபன உடன்படிக்கை 111 இல் கைச்சாத்திட்டுள்ளது. இவ்வுடன்படிக்கை தொழில் துறையில் பாரபட்சம் காட்டப்படுதலை தவிர்ப்பதற்கான உடன்படிக்கையாகும். சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் உடன்படிக்கை 110 தோட்டத்துறை தொழிலாளர்கள் தொடர்பானதாகும். இவ்வுடன்படிக்கையை இலங்கை 1995 ம் ஆண்டு ஏற்று அங்கீகரித்துள்ளது. எனினும் பல உறுப்புரைகளில் இருந்து விலக்களிப்பு பெற்றுள்ளமையும் தெரிந்ததேயாகும்.

### கூட்டு ஒப்பந்தம்

ஏட்டளவில் என்னதான் உரிமைகள் இருந்த போதும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு உரிமை மீறல்களுக்கும் உள்ளாகி வருகின்றமை யாவரும் அறிந்ததேயாகும். தொழில் உரிமைகள் இதில் முக்கியமானவையாகும். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில் மற்றும் ஏனைய விடயங்கள் கூட்டு ஒப்பந்தத்தின் மூலமாக தீர்மானிக்கப்படுகின்றது. எனினும் கூட்டு ஒப்பந்தத்தின் சரத்துக்களை கம்பனியினர் பல சந்தர்ப்பங்களில் மீறியுள்ளதாக தொழிலாளர்களும், அரசியல் தொழிற்சங்கவாதிகளும் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இதனைக் கண்டித்து இத்தரப்பினர் கிளர்ந்தெழுந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன. தொழில் உரிமையானது வாழ்வதற்கு தேவையான நியாயமான வேதனம், நியாயமான வேலைநேரம் என்பவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. எனினும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் உழைப்பிற்கேற்ற ஊதியத்தை பெற்றுக் கொள்வதென்பது தற்போது கானல் நீராகியுள்ளது. கூட்டு ஒப்பந்தம் நியாயமான சம்பளத்தை தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்க தவறியுள்ள நிலையில் போதுமான சம்பளம் வழங்கப்படாத காரணத்தினால் தோட்டத் தொழிலாளர்கள் ஏனைய உரிமைகளை அனுபவிப்பதில் பல தடைகள் ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இலாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட கம்பனியினர் தொழிலாளர்களை கசக்கிக் பிழிந்து வருவதாக கண்டனக் குரல்கள் மேலோங்கி வருகின்றன. மேலும் தொழில் செய்யும் இடங்களில் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை.

பாதுகாப்பற்ற சூழ்நிலையில் தொழில் புரியும் நிலைமைகளால் பல அனர்த்தங்களுக்கும் தொழிலாளர்கள் உள்ளாகி வருகின்றனர். எனவே கம்பனியினரின் எதேச்சாதிகாரம், உழைப்புக்கேற்ற ஊதியமின்மை மற்றும் தொழில் பாதுகாப்பின்மை போன்ற பல நெருக்கீடுகளுக்கும் உள்ளாகும் தொழிலாளர்கள், கிராமப்புற அல்லது நகர்ப்புற தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறை வலுவிழக்கும் நிலைமை உருவாகி வருகின்றது.

இந்நிலையில் இலங்கை, இந்திய நாடுகளில் பல்வேறு சமூக, பொருளாதார மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றபோதும் இந்நாடுகளிலே காணப்படுகின்ற பெருந்தோட்டங்களில் பாரிய மாற்றங்கள் ஏற்படவில்லை. மேலும் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதில் பலவீனமாகக் காணப்படுகின்றன. இப்பின்னணியில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும், உறுதி செய்வதற்கும் தேவையான சர்வதேச, உள்நாட்டு பொறிமுறைகளை வலுப்படுத்த வேண்டும்.

மேலும் தேயிலை வளங்கள் சங்கிலித் தொடரில் கம்பனிகளின் பொறுப்பாண்மையைக் கண்காணிக்கும் பொறிமுறையையும், நியாய வர்த்தக செயன்முறையையும் ஊக்குவிக்கவும் வேண்டியுள்ளது. அத்தோடு தொழிற்சங்க, சிவில் மற்றும் மனிதவுரிமை அமைப்புக்களின் கண்காணிப்பு, தலையீடு மற்றும் சட்ட நடவடிக்கை என்பவை உறுதி செய்யப்பட வேண்டும் என்று மனித உரிமை செயற்பாட்டாளர் பி.பி. சிவப்பிரகாசம் குறிப்பிட்டுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

• • •

## நேட்டோவின் ... தொடர்ச்சி ...

வதற்கு அமெரிக்கா மற்றும் போலந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த நேட்டோ உயர் அதிகாரிகள் அந்த பிரதேசத்திற்கு வந்ததாகவும், அவர்கள் தங்கியிருந்த நிலக்கீழ் பாதுகாப்பு இடம் மீது ரஸ்யா மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் பல அதிகாரிகளும் படையினரும் கொல்லப்பட்டதாகவும், காயமடைந்த பலர் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாகவும் *Military Review* என்ற ஊடகம் தெரிவித்துள்ளது.

பொஸ்னியா மற்றும் கேர்சோகோவினா ஆகிய நாடுகள் மீது நேட்டோ மேற்கொண்ட படை நடவடிக்கையில் இவர் முக்கிய பங்கு வகித்திருந்தார்.

அதேசமயம் உயர் அதிகாரிகளின் உதவியாளர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் என சென்ற பலரும் இதில் கொல்லப்பட்டுள்ளதாகவும், அவர்கள் விபத்துக்களில் பலியானதாக போலந்து ஊடகங்களில் அஞ்சலிகள் தொடர்ந்து வெளியிடப்படுவதாவும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

தவறுதலாக வெடிகுண்டு வெடித்ததில் 5ஆவது இரசாயனப் படைப்பிரிவைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் கொல்லப்பட்டதாகவும், மலைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நடவடிக்கையின் போது சிறப்பு படை அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதாகவும் போன்ற தகவல்களை போலந்து ஊடகங்களில் காணமுடிகின்றது.

அதேசமயம், ஐரோப்பிய இராணுவம் என்ற கூட்டணியின் தலைமை அதிகாரியாக பணியாற்றிய லெப். ஜெனரல் ஜரஸ்லோவ் குறோட்மாசிங்கி என்பவரை போலந்து அரசு அவசரமாக மீள அழைத்துள்ளது. பிரான்ஸின் ஸ்ராஸ்பேர்க்கைத் தளமாகக் கொண்ட இந்த கூட்டமைப்பானது போலந்து, ஸ்பெயின், ஜேர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம் மற்றும் லக்சம்பேர்க் ஆகிய நாடுகளைக் கொண்ட கூட்டணியாகும்.

அமெரிக்க அதிகாரிகளுடன் இணைந்து உக்ரைன் படையினருக்கு பயிற்சிகளை வழங்கி வந்த இவர் தொடர்பில் புதிய தகவல்களை போலந்தின் புலனாய்வுத்துறை கண்டறிந்ததால் அவர் பணியில் இருந்து நீக்கப்பட்டதாக போலந்தின் படைத்துறை தகவல்கள் தெரிவித்துள்ளன.

அதாவது நேட்டோவின் படைநடவடிக்கை தகவல்களை இவர் ரஸ்யாவுக்கு வழங்கினாரா என்ற சந்தேசம் எழுந்துள்ளது. பிரிகேடியர் ஜெனரலின் மரணத்தின் பின்னர் தலமையதிகாரி அவசரமாக மாற்றப்பட்டுள்ளார்.

இதனிடையே, உக்ரைன் படையினர் ஆளணி மற்றும் ஆயுதப்பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதாகவும், இந்த நிலையில் ரஸ்யாவின் முன்நகர்வை உக்ரைனினால் தடுத்து நிறுத்த முடியாது போய்விடும் எனவும் த எக்கொனமிஸ்ட் என்ற ஊடகம் தெரிவித்துள்ளது. இலகுவாக உக்ரைனின் முன்னரங்குகளை தகர்த்துவிடும் ரஸ்யா உக்ரைனின் உள்பகுதிகளுக்கு நீண்ட தூரம் முன்நகரும் சாத்தியங்கள் உள்ளதாகவும், கிழக்கு பகுதியே அவர்களின் குறியாக இருப்பதாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

• • •

## கிழக்கு மாகாண ... தொடர்ச்சி ...

இயற்கை அழகு கொட்டிக்கிடக்கும் பகுதியாகும். மட்டக்களப்பு வாவியானது சுமார் 30 மைல் நீளமான வாவி ஏறத்தாழ 27527 ஏக்கர் பரப்பினைக் கொண்டது. இலங்கையின் மிகப் பெரிய வாவி என்று கருதப்படும் வாவி மட்டக்களப்பு வாவியாகும். தெற்கு மேற்காகக் கடலுடன் கலக்கும் இவ்வாவி கடலிலிருந்து ஏறக்குறைய இருபது மைல் நீளம் வரை உவர்நீரையும் ஏனைய பகுதிகளில் நன்னீரையும் கொண்டுள்ளது. உப்புநீர்ப் பகுதியில் மீன்பிடித்தலும் நன்னீரைப் பயன்படுத்தி வேளாண்மையும் நடைபெறுவதால் இப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தேவைக்கு இன்றியமையாததாக உள்ளது.

இதில் அதிவிசால நிலப்பரப்பை கொண்ட எழில்மிகு வாவி சூழ நடுவில் மாந்தீவு அமைந்துள்ளது. கிட்டத்தட்ட 96 ஏக்கர் நிலப்பரப்பு கொண்டதாக இது உள்ளதாக கூறப்படுகின்றது. இத்தீவு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள தீவாகும்

மட்டக்களப்பு விமான நிலையத்திற்கு மேற்காக உள்ளது. இந்த தீவிலேதான் தொழு நோயாளர் வைத்தியசாலை உள்ளது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட இந்த வைத்தியசாலையின் அருகில் 116 வருடம் பழமை வாய்ந்த சித்திர வேலாயுத சுவாமி கோயில் உள்ளது. மூன்று கட்டடங்களைக் கொண்ட குறித்த தீவில் உள்ள தொழுநோயாளர் பிரிவில் ஒரே ஒரு நோயாளர் மட்டுமே தங்கவைக்கப்பட்டுள்ளார். அங்கு ஒரு நோயாளரை பராமரிப்பதற்கு பலர் இன்றும் பணிபுரிவதாகக் கூறப்படுகின்றது

இத்தீவானது மண்முனை வடக்கு பிரதேச செயலக மற்றும் வவுணதீவு பிரதேச செயலக எல்லையில் காணப்படுவதால் இத்தீவை சுற்றி வவுணதீவு, மங்கிக்கட்டு, திருப்பெருந்துறை, திமிலதீவு, வலையறவு, புதுநகர், கன்னங்குடா போன்ற பழம்பெரும் கிராமங்களும் அங்கு ஆயிரக்கணக்கான மக்களும் வாழ்கின்றனர். அதில் இயற்கை வளங்களும் ஆரோக்கியமான சூழலும் காணப்படுகின்றது. இத்தீவை அண்டிய கண்ணாபற்றை மற்றும் கரையோரத்தில் வளர்ந்துள்ள சிலவகை தாவரங்களின் கீழ்பகுதியில் பலவகை மீனினங்கள் இயற்கையான இனப் பெருக்கம் அதிகமாக செய்கின்றன இந்த ஆற்றுப் பகுதியை நம்பி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மீன்பிடி தொழிலை வாழ்வாதார தொழிலாக செய்கின்றனர்

இத்தீவில் பல அரியவகை உயிரினங்கள் வாழ்வதுடன் இத்தீவு பல வகையான பறவைக ளும் வெளிநாட்டு பறவைகளும் வந்து தங்கி செல்கின்றன.இத்தீவை இதன் இயற்கை அழகு குறையாமல் இயற்கைக்கும் இயற்கை வளங்களும் பாதுகாக்கப்படும் வகையில் சிறந்த இயற்கை சுற்றுலாத்தலமாக மாற்றப்படவேண்டும் என்ற தொடர் கோரிக்கைகள் தமிழர் தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்டுவருகின்றபோதிலும் இதுவரையில் அதற்கான எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாத நிலையில் குறித்த பகுதியை புனர்வாழ்வுநிலையமாகமாற்றுவதற்குஅரசாங்கம் முயற்சிகளை முன்னெடுத்துவருகின்றது.

உலக இயற்கையின் அழகிய பகுதிகளில் ஒன்றாக பெயர்பெறக்கூடிய ஒரு பகுதியில் இவ்வாறு சிறைச்சாலை அமைப்பதற்கான முயற்சிகளை ஏன் இந்த அரசாங்கம் முன் னெடுக்கவேண்டும் என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துநிற்கின்றது. போதைவஸ்த்து கடத்தல், பாதாள உலகக்குழுவினர் மற்றும் கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறுவு ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபட்டு மரணதண்டனை பெற்ற கைதிகள், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, கொழும்பு உட்பட இலங்கையின் தென்பகுதி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை இங்கு தடுத்துவைப்பதற்கு என்ன காரணம் எழுகின்றது என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

இங்கிருந்து இலகுவாக தமிழர்களின் எல்லைப்பகுதிக்கு சென்று வாழக்கூடிய சூழல்கள் காணப்படுவதனால் இங்கு புனர்வாழ்வு நிலையம் என்ற பெயரில் கொண்டுவரப்படுபவர்களைக்கொண்டு எதிர்காலத்தில் எல்லைப்பகுதியில் விவசாய நடவடிக்கை என்ற பெயரில் குடியேற்றங்களை செய்து எதிர்காலத்தில் எல்லைப்பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கு குடைச்சல்களை கொடுக் கலாம் என்ற நிலையில் சிங்கள அரசுகள் திட்டமிட்டு செயற்பட்டுவருகின்றது.

தென் தமிழீழத்தில் தமிழர்களின் பூர்வீக மாகவுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தினை இலக்குவைத்து முன்னெடுக்கப்படும் இந்த செயற்பாடுகளை இலங்கை அரசும் சிங்கள் பேரினவாத சக்திகளும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல்களைக்கொண்டு செயற்பட்டுவருகின்றது. ஆனால் தமிழர்களின் தரப்பில் இவ்வாறான பிரச்சினைகளையாவது வெளிக்கொணர்வதற்கு கூட யாரும் முன்வராத நிலையே காணப் படுகின்றது.எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட் டத்தில் சிங்கள பேரினவாதத்தின் கோரமுகத்தின் தாண்டவத்தினை காணுவதற்கு முன்பு அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன் னெடுக்கவேண்டும்.

• • •

## ரணிலுக்கு ... தொடர்ச்சி ...

பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாரா ளுமன்றத்தின் ஊடாக அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் செயல்பாடுகளை முன்னெடுக்கிறார்.இதற்கு அவருக்கு மக் களாணை கிடையாது. அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதாக இருந்தால் ஜனாதிபதி புதிதாக மக்களாணை பெற்றுக் கொள்ளவேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் குறித்து கட்சி மட்டத்தில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப் படவில்லை.கட்சி ரீதியில் எடுக்கப்படும் தீர் மானங்களுக்கு எதிராக செயல்படுபவர்கள் கட்சியில் இருந்து தாராளமாக வெளியேறலாம்" என்றும் நாமல் ராஜபக்ஷ எச்சரித்தார்.

## பிரித்தானி... தொடர்ச்சி ...

உறுதிப்படுத்தப்படவில்லை. பிரித்தானியாவின் இந்த நடவடிக்கைக்கு எதிரான பதில் நடவடிக்கை எடுக்கப்படும். எமது வர்த் தக்கத்தை பாதுகாப்பதற்கு சீனா தன்னால் முடிந்ததை செய்யும், பிரித்தானியாவின் தடை அரசியல் நலன் சார்ந்தது. பிரித்தானியாவின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு நாம் ஒருபோதும் முயற்சிப்பதில்லை என சீனாவின் வெளிவிவகார அமைச்சகத்தின் பேச்சாளர் லின் ஜியான் தெரிவித்துள்ளார்.

எனினும் *Advanced Persistent Threat Group 31 (APT31)* என்ற நிறுவனம் 2021 ஆம் ஆண்டு மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் தமது தேர்தல் திணைக்களம் மீது சைபர் தாக்கு தலை மேற்கொண்டதாகவும், அதனை தாம் பொறுத்துக்கொள்ள முடியாது எனவும் பிரித்தானியாவின் வெளிவிவகாரச் செயலாளர் டேவிட் கமரன் கடந்த திங்கட்கிழமை(25) இந்த தடைகளை அறிவித்தபோது தெரிவித்திருந்தார்.

## உயிர்த்த ஞாயிறு... தொடர்ச்சி ...

தேர்தலை எதிர்நோக்கியிருந்ததால் அரசியலை மையப்படுத்தி உளவு அமைப்புகளால் இந்த தாக்குதல் திட்டமிடப்பட்டதாகவும் தனக்கு முன்னர் அறியக்கிடைத்ததாக மைத்ரி மேலும் கூறியுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

மைத்ரிபால சிறிசேனவின் இந்த தகவல் தொடர்பில் இலங்கையின் முன்னாள் புலனாய்வு மற்றும் படைத்துறை அதிகாரிகளிடம் விசார ணையை நடத்துவதா என்பது தொடர்பில் பாதுகாப்புத்துறை மேல்மட்டத்தில் ஆராயப் பட்டு வருவதாக மேலும் தெரியவந்தது.

## உலக நீர்... தொடர்ச்சி ...

ஆரம்பித்து வைத்ததுடன் பேரமடுவ பகுதியில் பிரதான நீர் குழாயும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதில் பாடசாலை மாணவிகள் கலந்து கொண்டு மரநடுகையில் ஈடுபட்டதுடன் மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டி யாராச்சி மற்றும் நீர் வழங்கல் சபையின் பிரதி பொது முகாமையாளர், திருகோணமலை பிராந்திய முகாமையாளர்,சமூகவியலாளர், பொறியியலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



### தாக்குதலின்... தொடர்ச்சி ...

**மூன்று வாரங்களுக்கு முன்னர்தான் இந்தத் தகவல் தனக்குக் கிடைத்ததாகக் கூறியிருந்தார். இதன் அடிப்படையில் பார்க்கும் போது மைத்திரியின் இந்த அறிவிப்புக்களின் பின்னணியில் யார் இருக்கலாம் என சந்தேகிக்கின்றீர்கள்?**

இந்தத் தாக்குதல் தொடர்பாக ஆணைக்குழு விசாரணை நடந்தது. பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இது குறித்து தொடர்ச்சியாகவே கேள்விகளை எழுப்பிவந்தார். ஜெனீவாவில் கூட இந்தப் பிரச்சினை கிளப்பப்பட்டது. அப்போதெல்லாம் மௌனமாக இருந்த மைத்திரி இப்போது இந்த விடயங்களை வெளிப்படுத்த முற்படுவது ஒரு அரசியல் நோக்கத்துடனானதாக இருக்கக்கூடும்.

இதனால், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்பில் அல்லது இந்தியாவுடன் ரணிலுக்குள்ள நட்பில் ஒரு விரிசலை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புள்ளது.

சட்டமா அதிபர் இதனை இப்போது ஆராய்ந்து வருகின்றார். இதற்கு அடுத்த கட்ட நடவடிக்கையை அவர்தான் அறிவிக்க வேண்டும். இது தொடர்பில் நீதிமன்றத்தின் ஊடாக சட்டமா அதிபர் திணைக்களம் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்தைக் கைப்பற்றினார். அதனால், அவர் ஆட்சிக்கு வருவதற்கான தேர்தல்தான் இது என்று மைத்திரி சொல்வாராக இருந்தால் கோட்டாபய ராஜபக்ஷ கூட விசாரணைக்காக அழைக்கப்படலாம்.

அதேபோல, இந்தியாவிலிருந்து கூட, இந்தியாவுடனான உறவுகளில் கூட ஒரு முறுகல் நிலை அல்லது ஒரு விரிசல் வரலாம். பெயரைக் குறிப்பிட்டு மைத்திரி கூறியிருப்பதால், அதனைத் தட்டிக்கழித்துவிட முடியாது.

**ஜனாதிபதித் தேர்ததலும் நடைபெறவிருக்கும் நிலையில் உள்நாட்டு அரசியலில் இதன் தாக்கம் எவ்வாறானதாக அமையும்?**

இது பாரிய தாக்கம் ஒன்றை ஏற்படுத்தும். உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் கிறிஸ்தவர்கள். அதனால், அரசாங்கம் தெரிந்தும் சில நடவடிக்கைகளை எடுக்கவில்லை என அவர்கள் கருதலாம். ஜனாதிபதி ரணில் இந்த விசாரணைகளுக்காக ஸ்கொட்லன்ட யார்ட் பொலிஸார் வரவழைக்கப்படுவார்கள் என்று கூட கூறியிருந்தார். ஆனால், எதுவும் நடைபெறவில்லை. இது குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்படாவிட்டால் கிறிஸ்தவ மக்கள் தற்போதைய ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கையிழக்கலாம்.

இரண்டாவதாக, இந்தச் சம்பவத்தினால் முஸ்லிம் சமூகமும்கூட பாதிக்கப்பட்டது. அவர்கள் விசாரணை, கைது என துன்பங்களை அனுபவித்தார்கள். முறையான விசாரணை ஒன்றை அவர்களும் எதிர்பார்ப்பார்கள்.

ஆகவே, இது ஜனாதிபதி ரணிலுக்கு பெரியதொரு அழுத்தத்தைக் கொடுப்பதாகவே இருக்கும்.

**இந்தியாவுடனான உறவுகளை இச்சம்பவம் பாதிக்கும் எனக் குறிப்பிட்டிருந்தீர்கள். அதேவேளையில், சர்வதேச ரீதியாக இதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் எவ்வாறானதாக இருக்கும்?**

சர்வதேச சமூகம் இந்த காரத்துக்கு ஒரு நீதியை எதிர்பார்க்கின்றது. பாதிக்கப்பட்ட மக்கள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வரையில் சென்றிருக்கின்றார்கள். சர்வதேச சமூகம் இந்த விசாரணை நேர்மையாக இடம்பெற வேண்டும் என வலியுறுத்ததும். இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களில் சர்வதேச நாடுகளின் முக்கிய பிரமுகர்களின் உறவினர்கள் இருக்கின்றார்கள். பல நாடுகளின் செல்வந்தவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அவர் இதில் நட்டஈட்டை கோராத போதிலும் கூட, நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் இருக்கின்றார்கள்.

அவர்கள் அங்கு கொடுக்கும் அழுத்தங்கள், மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மூலமாக அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் என்பன மைத்திரியின் அறிவிப்புக்குப் பின்னர் மேலும் வலுவாகும். சூத்திரதாரி யார் என்பது தனக்குத் தெரியும் என மைத்திரி சொல்கிறார். எனவே அதனைப் பகிரங்கப்படுத்துங்கள் விசாரணைகள் மூலமாக வெளிப்படுத்துங்கள் என்ற வகையில் ரணில் அரசாங்கத்தின் மீதான அழுத்தம் அதிகரிக்கும். ரணிலைப் பொறுத்தவரையில் இது ஒரு புதிய பிரச்சினை. இதனை அவர் எவ்வாறு கையாளப்போகிறார் என்பது தெரியவில்லை.

ஆனால், இந்தவிடயத்தை ரணில் நீதிமன்றத்தின் பொறுப்பிலேயே விட்டிருக்கின்றார். கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து பேசப்படவே இல்லை. இந்த விவகாரத்தை ஜனாதிபதி பேசுவார் என அமைச்சர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், ஜனாதிபதி இந்த விவகாரத்தை எடுக்கவில்லை. அதாவது, இந்த விடயத்தில் சட்டப்படியான செயற்பாடுகளை நீதிமன்றம் முன்னெடுக்கட்டும் என்ற நிலைப்பாட்டில்தான் அவர் இருக்கின்றார் என்பது தெரிகின்றது

• • •

### எதிர்க்கட்சிகள்... தொடர்ச்சி ...

உறவுகளுக்கு அடித்தளமாக உள்ளது. எனவே பிறநாடுகள் மற்றைய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என இதற்கு பதிலழித்த இந்தியா தெரிவித்துள்ளது.

புதிய மதுபான கொள்கை திட்டத்தில் ஊழல் நடைபெற்றதாக தெரிவித்தே அரவிந்த் கடந்த 21 ஆம் நாள் கைது செய்யப்பட்டிருந்தார்.

அதேசமயம், இந்திய காங்கிரஸின் வங்கிக் கணக்குகளை தற்போதைய இந்திய அரசு முடக்கியுள்ளதாக காங்கிரஸ் குற்றம் சுமத்தியுள்ள நிலையில் சில மணிநேரத்தில் இந்த கைது இடம்பெற்றுள்ளது. ஆளும் பாரதிய ஜனதா கட்சி அரசியல் பழிவாங்கலில் ஈடுபட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

காங்கிரஸ் கட்சியின் வங்கிக்கணக்கு முடக்கப்பட்டது தொடர்பிலும் அமெரிக்கா கவனம்செலுத்துவதாகமில்லர்தெரிவித்துள்ளார். இதனிடையே, அரவிந்த் கைது தொடர்பில் ஜேர்மனி தெரிவித்த கருத்துக்கும் இந்தியா கடுமையான எதிர்ப்புக்களைத் தெரிவித்துள்ளது. இந்தியா ஜனநாயக நாடு என்பதால் நியாயமான நீதி விசாரணை நடைபெறும் என தாம் நம்புவதாக ஜேர்மனி தெரிவித்திருந்தது.

### விசேட தேவை ... தொடர்ச்சி ...

நிகழ்வின் தொடக்கவுரையை நூலக உதவியாளர் அ.அச்சுதன் வழங்க, வரவேற்புரையை நூலகர் திருமதி. மு. லெ. றிம்சானா வழங்கினார்.

செயலாளரின் தலைமையுரையும் கோப் நிறுவனத்தின் பணிப்பாளரின் சிறப்புரையும் இடம் பெற்றது.

நிகழ்வில் நன்றியுரையை நூலக உதவியாளர் பா. விபூஷிதன் வழங்கினார்.

நிகழ்வில் நகரசபையின் நிர்வாக உத்தியோகத்தர் எச். எம். திலினி சந்தமாலி, பிரதம நூலகர் ந. யோகேஸ்வரன், நூலக உதவியாளர் உ.ரஜனிக்காந், கோப் நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர் கிருஸ்னி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### சுவாமி விபுலான ... தொடர்ச்சி ...

திருகோணமலை வலயக் கல்வி பணிப்பாளர் தினகரன் ரவி, திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்கத்தின் தலைவர் ச.குகதாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### இஸ்ரேல்... தொடர்ச்சி ...

கடல் பகுதிகளில் வீழ்வதால் இந்த விநியோக முறை பெருமளவில் பலன்தரவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

வீதியால் மானிதாபிமான உதவிகள் செல்லும் வழியை இஸ்ரேல் தடுக்காதுவிட்டால் அங்கு உதவிகளைஎடுத்து செல்வதற்கு இத்தகைய சிரமங்களை எதிர்கொள்ளத்தேவையில்லை என ஐ.நா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### பிலிப்பைன்ஸ்... தொடர்ச்சி ...

நாடுகளுடன் இணைந்து பயணிக்க வேண்டும் என கடந்த செவ்வாய்க்கிழமை(26) மனிலாவில் இடம்பெற்ற இருதரப்பு சந்திப்பின் போது பிலிப்பைன்ஸ் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர்கள்மேற்கொண்ட ஊடகவியலாளர்கள் சந்திப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெயசங்கர் தெரிவித்திருந்தார்.

ஆனால் இரு நாடுகளுக்கு இடையில் உள்ள கடல் விவகாரங்களில் மூன்றாம் தரப்பு தேவையில்லாமல் தலையிடுவது முறையற்றது என இது தொடர்பில் கருத்து தெரிவித்த சீனாவின் வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் லின் ஜியான் தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸில் அமெரிக்கா அதிக படைத்தளங்களை அமைப்பதற்கான அனுமதியை பிலிப்பைன்ஸ் வழங்கியதில் இருந்து பிலிப்பைன்ஸிற்கும் சீனாவுக்கும் இடையிலான மோதல்கள் உக்கிரமடைந்து வருகின்றன.

அருணாச்சல பிரதேசத்தில் உள்ள எல்லை தொடர்பில் சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான முறுகல் நிலை அண்மைக்காலமாக அதிகரித்துவரும் நிலையில் ஜெய்சங்கரின் கருத்து வெளிவந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

### இராணுவத்தின்... தொடர்ச்சி ...

அரசாங்கங்கள் உறுதியளித்தன. ஆனால், அவை எதுவும் நடக்கவில்லை.

இந்த நிலையிலேயே, இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம் தொழிற்சாலையை இராணுவ சமூக சேவையின் கீழ் வழங்கியுள்ளது. இதைத் தொடர்ந்தே தொழிற்சாலையை புனரமைக்கும் பணிகளில் இராணு வம் ஈடுபட்டுள்ளது.

“நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவும் உள்நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப் புகளை உருவாக்கவும் அந்தப் பகுதி மக்களின் நலனை மேம்படுத்தவும் இந்த தொழிற்சாலை புதுப்பிக்கப் படுகிறது” என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.